செ.வெ.எண்: 31 நாள்: 25.04.2020

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்பு அலுவலர் /அரசு அருங்காட்சியக ஆணையர் திரு.எம்.எஸ்.சண்முகம் இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்பு அலுவலர் /அரசு அருங்காட்சியக ஆணையர் திரு.எம்.எஸ்.சண்முகம் இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலை வகித்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா தொற்று இருக்கும் என சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்து எடுக்கப்படும் அனைத்து இரத்த மாதிரிகளும் பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பரிசோதனை செய்யப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 1032 இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டுள்ளன, அதில் 18 இரத்த மாதிரிகள் இரண்டாவது முறையாக (Repeated Test) பரிசோதனைக்கு எடுக்கப்பட்டுள்ளன. அதில் 42 இரத்த மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது ( Positive ) எனவும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அறுவைச் சிகிச்சைக்காக சென்ற நமது மாவட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருவாரூரில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதில் மேற்படி நபருக்கு கொரோனோ தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. காசி சென்று திரும்பிய வேளாங்கண்ணியைச் சேர்ந்த ஒரு நபருக்கு திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு அறிக்கை வந்துள்ளது. இந்த இரண்டு நபர்களையும் சேர்த்து இதுவரை 44 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி(Positive) செய்யப்பட்டுள்ளது. இதில் 10 நபர்கள் குணமடைந்த நிலையில் மருத்துவமனையிலிருந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 972 இரத்த மாதிரிகள் கொரோனா தொற்று இல்லாதவை (Negative) எனவும் பரிசோதனை முடிவில் ஆய்வறிக்கை வந்துள்ளது. மேலும் 18 இரத்த மாதிரிகளுக்கு பரிசோதனை முடிவுகள் நிலுவையில் உள்ளது.

கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட நபர்கள் வசிப்பிடங்களாக நாகப்பட்டினத்திலுள்ள 13 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த 13 இடங்களிலும் உள்ள வீடுகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் அடங்கிய பகுதிகள் (Containment Zone) தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த தடைசெய்யப்பட்ட பகுதிகளில் அத்தியாவசியமில்லாத வழிகளை தடை செய்து, அத்தியாவசியமான பொருட்களை வீட்டுக்கு வீடு வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாடு 28 நாட்கள் வரை நோய் பரவாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் தற்சமயம் நாகப்பட்டினம் டவுன், காடம்பாடி, நாகூர், திட்டச்சேரி, மயிலாடுதுறை, சீர்காழி டவுன், வேளாங்கண்ணி ஆகிய 7 நகர்ப்புறங்களிலும், பொரவச்சேரி, திருக்களாச்சேரி, விற்குடி, புத்தூர்(சீர்காழி வட்டம்), திருக்கடையூர் மற்றும் பெருந்தோட்டம் ஆகிய 6 ஊராட்சிகளிலும் இந்த தடைசெய்யப்பட்ட பகுதிகள் (Containment Zone ) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் 31,946 வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி வீடுகளில் வசித்து வரும் 1,22,066 நபர்களில் 60 வயதினைக் கடந்தவர்கள் 13,277 நபர்கள். இரத்த கொதிப்பு, சர்க்கரை நோய் உள்ளவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட 7,578 நபர்கள் உள்ளனர். இதில் 243 நபர்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவில் 42 மாதிரிகளில் கொரோனா தொற்று (Positive) உறுதிசெய்யப்பட்டும், மீதமுள்ள 201 மாதிரிகளில் கொரோனா தொற்று இல்லாதவை (Negative ) எனவும் அறிக்கை வரப்பெற்றுள்ளது.

தடைசெய்யப்பட்ட பகுதிகளில் (Containment Zone ) 50 மருத்துவர்கள், 40 செவிலியர்கள், 133 சுகாதாரத்துறை அலுவலர்கள், 600 அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் 200 காவல்துறை அலுவலர்கள் மூலம் வீட்டுக்குவீடு சென்று கொரோனா பரவுதலுக்கான அறிகுறிகளை விசாரித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 3,383 குடும்பங்கள் (Home Quarantine) வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களது வெளிநடமாட்டம் 28 நாட்களுக்கு தடை செய்யப்பட்டிருந்தது.

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் இ.ஜி.எஸ். பிள்ளை மருந்தியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து உலக சுகாதார அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கை கழுவும் கிருமி நாசினி திரவம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு, மேற்படி கிருமி நாசினி திரவத்தினை 300 மி.லி பாட்டிலில் அடைத்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இதர அரசு அலுவலர்களுக்கான கிருமி நாசினி திரவத்தினை வழங்கி வருகிறது. மேலும் மாவட்ட நிருவாகத்திடம் போதுமான கிருமி நாசினி திரவம் கையிருப்பு உள்ளது. இதை தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களோ, தனி மனிதரோ தங்களுக்கு தேவைப்பட்டால் 300 மி.லி கிருமி நாசினி திரவத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் ரூ.150/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை நகராட்சியில் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு வெளியே செல்வதற்காக வீட்டுக்கு ஒரு அனுமதிச்சீட்டு (Pass) வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதிச்சீட்டினைப் பயன்படுத்தி ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் மட்டும் வாரத்தில் 2 நாட்களுக்கு மட்டுமே வெளியே சென்றுவர அனுமதியளிக்கப்படுகிறது. இதன்மூலம் அத்தியாவசிய பொருட்கள் வாங்கும் கடைகளில் கூட்ட நெரிசல் முற்றிலும் குறைந்து சமூக இடைவெளி கடைபிடிக்கப்படுகிறது. அனைத்து நகராட்சிகள் மற்றும் சில பேரூராட்சிகளில் வீட்டுக்குவீடு ரூ.100/- விலையுள்ள காய்கறித் தொகுப்புகள் வேளாண்மைத் துறை மற்றும் நகராட்சி நிர்வாத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவ சிகிச்சை, இறப்பு மற்றும் திருமணம் ஆகிய அவசர காரணங்களுக்காக மட்டும் வெளியூர் செல்வதற்காக மாவட்ட இணையதளத்தில் விண்ணப்பிக்கும் நபர்களுக்கு உரிய ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தினந்தோறும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த இடம் பெயர்ந்த தொழிலாளிகளுக்கும், சாலையோரம் வசிக்கும் நபர்களுக்கும் மற்றும் ஆதரவற்ற நபர்களுக்கும் காலை மதியம் மற்றும் இரவு என மூன்று வேளைகளும் சராசரியாக **1,568** நபர்களுக்குத் தேவையான உணவுப் பொட்டலங்கள் அந்தந்த நகராட்சி நிர்வாகத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை **1,20,373** உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த பிற மாநிலங்களில் (கேரளா, மகாராஷ்ட்ரா, கோவா) வசிக்கும் பிற தொழிலாளர்களுக்கு அந்தந்த மாநிலத்தின் மாவட்ட நிர்வாகத்தை தொடர்புகொண்டு, அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உணவு, இருப்பிடம் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா நிவாரணமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ரூ.1000/- உதவிதொகை இதுவரை **4,67,710 (Out of 4,70,844)** குடும்ப அட்டைதாரர்களுக்கு **(99.3%)** வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள உதவிதொகை எதிர்வரும் ஓரிரு தினங்களுக்குள் வழங்கப்பட்டு விடும். பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் அனைத்தும் சமூக இடைவெளியுடன் டோக்கன் முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை **4,53,028** குடும்ப அட்டைதாரர்களுக்கு **9498.368** மெட்ரிக்டன் அரிசியும், **453.028** மெட்ரிக்டன் பருப்பும், **187.184** மெட்ரிக் டன் கோதுமையும், **4,48,909** லிட்டர் பாமாயிலும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை உள்ளிட்ட 11 வகையான ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறுகின்ற **93,768** நபர்களில், தற்சமயம் வங்கித் தொடர்பாளர்கள் ( Banking Correspondent ) மூலமாக வீடு வீடாகச் சென்று **93,339** நபர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு அடுத்த சில தினங்களுக்குள் தொகை வழங்கப்படும்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கன்வாடி குழந்தைகளுக்கு போதிய ஊட்டச்சத்தினை வழங்கிடும் பொருட்டு ஒரு குழந்தைக்கு 15 நாட்களுக்கு தேவையான 1 கிலோ 200 கிராம் அரிசி, 150 கிராம் பருப்பு மற்றும் 6 முட்டைகள் அங்கன்வாடி பணியாளர்கள் மூலமாக சுமார் 26,500 குழந்தைகளின் வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த 15 நாட்களுக்கான அரிசி, பருப்பு மற்றும் முட்டைகள் 26,500 குழந்தைகளுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 22 திருநங்கைகளுக்கும் தலா 12 கி.கி. அரிசி, 1 கி.கி. சர்க்கரை மற்றும் 1 கி.கி. பருப்பு என்ற வகையில் 264 கி.கி. அரிசி, 22 கி.கி. பருப்பு மற்றும் 22 கி.கி. சர்க்கரை வழங்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அமைப்பு சாரா கட்டுமானத்தொழிலாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.1000/- E.C.S மூலமாக அவரவரின் வங்கிக்

கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. மேலும், இவர்களுக்கு தலா 15 கி.கி. அரிசி, 1 கி.கி. பருப்பு மற்றும் 1 கி.கி. சமையல் எண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கட்டிடத்தொழிலாளர்கள் உட்பட **17,877** பதிவுபெற்ற அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களில் **17,832 (99.7%)** குடும்பங்களுக்கு தலா 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் விலையின்றி வழங்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி குடும்பங்களுக்கு அரசு அறிவித்த நிவாரண உதவித் தொகையான ரூ.1000/- தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணப் பறிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணி **74.7%** நிறைவடைந்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற **573** உறுப்பினர்களுக்கு தலா ரூ.1000/- சிறப்பு நிவாரண உதவி வழங்கப்படவுள்ளது. இதர நல வாரியங்களின் கீழ் 31,225 பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கும் ரூ.1000/- வழங்கப்படவுள்ளது. முடி திருத்துவோர் நல வாரியத்தில் **299** பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு ரூ.1000/- வழங்கப்படவுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான கொரோனா தொற்று தடுப்பு இலவச அழைப்பு எண்ணிற்கு (18004250111) வரும் அனைத்து அழைப்புகளும் ஏற்கப்பட்டு அதில் கோரியுள்ள உடனடி தேவைகளான மருத்துவ உதவிகள், ஓய்வூதியம், நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை உடனடியாக அவர்களின் வீட்டிற்கே சென்று வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை வந்த 128 அழைப்புகளில் 128 அழைப்புகளுக்கு உடனடியாக அவர்கள் கோரிய உதவிகள் அவரவர்கள் வீடுகளுக்கே சென்று வழங்கப்பட்டுள்ளன.

முன்னதாக நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்,கனி சந்தையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் சிக்கல் பேருந்து நிலையத்தில் கிருமி நாசினி தெளிக்கப்படுவதை பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்(கூடுதல் ஆட்சியர்) திரு.எம்.எஸ்.பிரசாந்த்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செல்வநாகரெத்தினம்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இந்துமதி, நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் திரு.பழனிகுமார், செய்தி மக்கள் தொடாபு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், உட்பட சுகாதாரத்துறை, காவல்துறை, மீன்வளத்துறை, மின்சார வாரியம், கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவுத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**